Cheshire Home, Katpadi

* 68 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have discontinued the grants for the Cheshire Home at Katpadi; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி : காட்பாடி நகரத்தில் அமைக்கப்பட்டிருக்கிற செஷைர் ஹோம் என்பது, அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் கணவன்—மனைவி இருவரும் வேலைசெய்யக்கூடியவர்களாக இருந்தால், அவர்களுடைய குழந்தைகளைப் பராமரிக்க கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்ட இல்லமாகும். அது பல ஆண்டு காலத்திற்கு முன்னால் உருவாக்கப்பட்டு, இப்பொழுது ஏராளமான குழந்தைகள் அங்கு வருகிறார்கள். அவர்களைப் பேணிக் காப்பதற்கு ஏற்கெனவே அன்னிய நாட்டிலிருந்து அந்த மானிய உதவி வராத காரணத்தால், இப்போது இருக்கிற குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட இல்லத்தார் விண்ணப்பித்தால் இன்னும் அதிக மானிய உதவி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி பொருத்தமானது தான். ஆனால், சமூக நலத் துறையில் இந்த செஷைர் ஹோம் கவனிக்கப்படுகிறது. சென்ட்ரல் சோஷல் வெல்ஃபேர் போர்டும், மாநில சோஷல் வெல்ஃபேர் போர்டும் அவர்களுக்கு உதவி செய்கிறது. அவர்கள் தொழு நோய் உள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவத் துறையின் சார்பாக உதவி வழங்க முடியும் என்ற நிலையில் ஏற்கெனவே வழங்கிய உதவி கூட தவறான அடிப்படையில் வழங்கப்பட்டுவிட்டது என்று திருப்பிக் கேட்கத்தக்க செய்தி உட்பட இருக்கிறது.

Drinking water supply scheme for Kanyakumari district

* 69 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state whether it is a fact that the Vilathurai Lift Irrigation Scheme in Kanyakumari district is to be utilised as a Drinking water supply scheme?